[2010 நவம்பர் 9

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கொடுத்த அறிவிப்புகள் அனைத்தும் பரிசீலனையில் இருக்கின்றன. நான் பரிசீலனை செய்து, எடுக்கக்கூடியவற்றை எடுப்பேன். இதைத்தான் எடுக்கவேண்டும், இதை எடுக்கக்கூடாது என்று சொல்வதற்கு உங்களுக்கு உரிமை கிடையாது. (குறுக்கீடு)

முற்பகல் 11–25

6. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2010–2011, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010–2011 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை அளித்தல். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2010–2011 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் வைக்கின்றேன். துணை மானியக் கோரிக்கைளை விளக்கிக் கூறும் விரிவானதொரு அறிக்கை@ இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகள் மொத்தம் ரூபாய் 3,607 கோடியே 27 இலட்சம் நிதியை ஒதுக்குவதற்கு வகை செய்கின்றது. இதில் ரூபாய் 2,168 கோடியே 58 இலட்சம் வருவாய்க் கணக்கிலும், எஞ்சிய தொகையான ரூபாய் 1,438 கோடியே 69 இலட்சம் மூலதனம் மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும்.

2. 2010–2011 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டம் சட்டமன்றப் பேரவையில் 2010 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 19 ஆம் நாளன்று தாக்கல் செய்யப்பட்ட பின்னர், 'புதுப் பணிகள்' மற்றும் 'புதுத் துணைப் பணிகள்' குறித்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட இனங்களுக்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறுவதும், இத்திட்டங்களுக்காக எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து விடுவிக்கப்பட்ட தொகையினை அந்நிதிக்கு ஈடு செய்வதும்தான் இந்தத் துணை மானியக் கோரிக்கையின் முக்கிய நோக்கமாகும். தமிழக மக்களின் நலனைக் கருத்திற்கொண்டே இத்தகைய சில புதிய செலவுப் பொறுப்புகள் இந்த அரசால் மேற்கொள்ளப்பட்டன.

@ 80 முதல் 84 வரையிலான பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளன.

3. தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்று சுமார் நான்கரை ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ள நிலையில் இந்த அரசு ஏழை எளிய பாமர மக்களின் மேம்பாட்டிற்காக ஆற்றியுள்ள அரும்பணிகளை யாரும் மறுக்க முடியாது. இதுவரை 4 இலட்சத்து 79 ஆயிரம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ள நிலையில், இம்மகளிரின் பொருளாதார மேம்பாட்டுக்கு ரூபாய் 15 கோடியே 32 இலட்சம் செலவில், ஏழைகளுக்காகவே தொண்டாற்றி வாழ்ந்த அணையா விளக்கு அன்னை தெரசாவின் நூற்றாண்டு விழாவினை இந்த அரசு கொண்டாட முடிவெடுத்துள்ள இந்த வேளையில் (மேசையைத் தட்டும் ஒலி) அவரது பெயரால் ஒரு மாபெரும் வணிக வளாகத்தை சென்னை மாநகரில் இந்த ஆண்டு நவம்பர் திங்கள் முதல் நாளன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார். இப்பணிக்கென தேவைப்படும் கூடுதல் நிதியை மாநில நிதியாக ரூபாய் 7 கோடியே 3 இலட்சம் தற்போது மானியக் கோரிக்கை எண் 42 — ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

4. தமிழ் உணர்வை இளைய தலைமுறைக்கு ஊட்டவும், கணினியுகத்தில் தமிழ் மொழி அடைய வேண்டிய பரிணாம வளர்ச்சியைப் பற்றி அலசி ஆராயவும், செம்மொழியாம் தமிழ் மொழியின் பல்வேறு சிறப்பம்சங்களை உலகளாவிய நிலைக்குக் கொண்டு செல்லவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களால் கோவை மாநகரில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு (மேசையைத் தட்டும் ஒலி) முதல்முறையாக 2010 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 23 ஆம் தேதி முதல் 27 ஆம் தேதி வரை மகத்தான நிகழ்வாக நடந்தேறியது. இந்த மாநாடு தமிழைத் தரணியெங்கும் எதிரொலிக்கச் செய்கிற முக்கிய நிகழ்வாக விளங்கியதுடன், அடுத்தகட்டமாக தமிழ் மொழியின் வளர்ச்சிக்குச் செய்யவேண்டிய பணிகள் குறித்த பரிசீலனை செய்யும் களமாகவும் விளங்கியது. இம்மாநாட்டின் முடிவில் தமிழில் பயின்றவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பில் முன்னுரிமை என்கிற வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவு எடுக்கப்பட்டு, அது உடனடியாக செயல்படுத்தப்பட்டு தமிழ் ஆர்வலர்களுக்கு நிறைவைப் பெற்றுத் தந்தது. இம்மாநாட்டிற்காக தற்போது தேவைப்படும் கூடுதல் நிதி

ரூபாய் 15 கோடியே 50 இலட்சம் பல்வேறு மானியக் கோரிக்கைகளில் இத்துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும், மதுரையில் அமைய இருக்கும் உலகத் தமிழ்ச் செம்மொழித் தொல்காப்பியர் பேரவைக்கு காப்புத் தொகையாக ரூபாய் 100 கோடியும், நடப்பு ஆண்டிற்கான செலவினத்தை மேற்கொள்ள சிறப்பு மானியமாக ரூபாய் 14 இலட்சத்து 46 ஆயிரத்தையும் அரசு அனுமதித்துள்ளது. இதற்காக, 'மானியக் கோரிக்கை எண் 46–தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)' என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் ரூபாய் 100 கோடியே 14 இலட்சம் சேர்க்கப்பட்டுள்ளது.

முற்பகல் 11–30

5. தஞ்சை பெரிய கோயில், தமிழர்களின் கலை உணர்வுக்கும், பண்பாட்டுக்கும் தலைசிறந்த அடையாளமாகத் திகழ்கிறது. மாமன்னன் இராசராசன் அதைக் கட்டி ஆயிரம் ஆண்டுகள் நிறைவு பெற்றதையொட்டி, தஞ்சை மாநகரில் செப்டம்பர் 22 முதல் 26 ஆம் தேதி வரை ஐந்து நாட்கள் கோலாகலமான விழா நடத்தப்பட்டது. பெரிய கோயிலின் சிறப்புக் கூறுகளையும், அதன் கலை வடிவங்களையும், மாமன்னன் இராசராசனின் நிர்வாகப் பெருமையையும் உலகமெங்கும் ஒலிக்கச் செய்த உன்னத விழாவாக இது விளங்கியது. இவ்விழா ஏற்பாடுகளுக்கு ரூபாய் 8 கோடியே 25 இலட்சமும், தஞ்சை மாநகரின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூபாய் 38 கோடியே 88 இலட்சமும் அனுமதிக்கப்பட்டது. இதற்காக தற்போது தேவைப்படும் கூடுதல் நிதி ரூபாய் 35 கோடியே 47 இலட்சத்து 93 ஆயிரம் உரிய மானியக் கோரிக்கைகளில் இத்துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

6. ஏழையெளிய மக்களுக்கு உணவுப் பாதுகாப்பை வழங்கும் பொருட்டு, அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம் மூலம் ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசியும், பிற அத்தியாவசியப் பொருட்களான துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு என மளிகைப் பொருட்கள் 10 அடங்கிய பொட்டலம் மற்றும் பாமாயில் எண்ணெய் ஆகியவற்றை சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தில் மானிய விலையில் வழங்குவதால் அரசின் உணவு மானியச்

செலவு ரூபாய் 3 ஆயிரத்து 750 கோடியாக மதிப்பிடப்பட்டது. இத்திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்த ரூபாய் 200 கோடி கூடுதலாக அரசு மானியம் தேவைப்படுகிறது. இத்தொகை "மானியக் கோரிக்கை எண் 13–உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)" என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

7. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு நெல் கொள்முதல் செய்ய அரசு குறுகிய காலக் கடனாக ரூபாய் 500 கோடி அனுமதிக்க உத்தேசித்துள்ளது. "மானியக் கோரிக்கை எண் 13–உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)" என்பதன்கீழ் இத்தொகை துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

8. மாநிலம் முழுவதும் நகராட்சி மற்றும் மாநகராட்சி சாலைகள் சீரமைப்பதற்காக சிறப்பு சாலைத் திட்டத்திற்கு ரூபாய் 1,000 கோடியை அரசு அனுமதித்துள்ளது. இதற்காக, ஏற்கெனவே வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதியைவிடக் கூடுதலாகத் தேவைப்படும் ரூபாய் 309 கோடியை, மாநில அடிப்படை வசதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியிலிருந்தும் ரூபாய் 194 கோடியை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட வேண்டிய பகிர்வு நிதி நிலுவையிலிருந்தும், தமிழ்நாடு நகர்ப்புற சாலை அடிப்படைக் கட்டமைப்பு நிதியத்திற்கு அரசு அனுமதித்துள்ளது. இதற்காகத் துணை மதிப்பீடுகளில் முறையே "மானியக் கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை" என்பதன்கீழ் ரூபாய் 309 கோடியும், "மானியக் கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை" என்பதன்கீழ் ரூபாய் 194 கோடியும் சேர்க்கப்பட்டுள்ளது.

9. ஏழையெளிய மக்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டத்தின்கீழ், இதுவரை ஒரு கோடியே 52 இலட்சத்து 80 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்யப்பட்டு, ஒரு கோடியே 44 இலட்சத்து 35 ஆயிரத்து 756 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஐந்தாவது கட்டமாக ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டு கொள்முதல் செய்யப்பட்டுவரும் 40 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளுடன் கூடுதலாகத்

தேவைப்படும் 10 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொள்முதல் செய்வதற்காக, ரூபாய் 261 கோடி கூடுதல் நிதியொதுக்கம் தேவைப்படுகிறது. "மானியக் கோரிக்கை எண் 31–தகவல் தொழில்நுட்பவியல் துறை" என்பதன்கீழ் இத்தொகை துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

10. தனியார் தொழில் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன், படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு பயிற்சியுடன்கூடிய வேலைவாய்ப்பைப் பெற்றுத் தரும் திட்டம் கடந்த சுதந்திர தினத்தன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக அரசு ரூபாய் 50 கோடி அனுமதித்துள்ளது. இத்தொகை, "மானியக் கோரிக்கை எண் 32–தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை" என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

11. மக்களின் அடிப்படை வசதிகளில் ஒன்றான குடிநீர்த் தேவையை நிறைவு செய்வதில் இந்த அரசு மிகுந்த முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. கூட்டுக் குடிநீர் வழங்கும் திட்டங்களின் பராமரிப்பு உட்பட பல்வேறு செலவினங்களுக்காக தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்திற்கு மானியமாக ரூபாய் 84 கோடியும், சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்த ரூபாய் 270 கோடியும் அரசு அனுமதித்துள்ளது. இத்தொகை, "மானியக் கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை" என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் முறையே ரூபாய் 84 கோடி மற்றும் ரூ.1,000/– அடையாளத் தொகை சேர்க்கப்பட்டுள்ளது.

12. சமூகப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் முன்னோடியாக உள்ள மாநிலம் தமிழ்நாடு. இத்திட்டத்தில் கூடுதலாகியுள்ள பயனாளிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு, சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின்கீழ் வழங்கப்படும் பல்வேறு வகையான ஓய்வூதியங்களுக்கு கூடுதல் நிதியொதுக்கமாக ரூபாய் 142 கோடியே 80 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகை "மானியக் கோரிக்கை எண் 41–வருவாய்த் துறை" என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

முற்பகல் 11–35

13. குடிசைகள் இல்லா மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கத் தீட்டப்பட்ட "கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின்"கீழ் (மேசையைத் தட்டும் ஒலி) கட்டப்பட்டுவரும் கான்கிரீட் கூரையுடன்கூடிய வீடுகளுக்கான அலகுத் தொகையை அறிவிக்கப்பட்ட ரூ.60,000/—லிருந்து ரூ.75,000/— ஆக உயர்த்த இந்த அரசு ஆணையிட்டுள்ளது. இதனால் ஏற்படும் கூடுதல் செலவினத்திற்காக ரூபாய் 450 கோடியை அரசு அனுமதித்துள்ளது. அதேபோல் மத்திய அரசின் திட்டமான இந்திரா வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுவரும் வீடுகளுக்கும் மத்திய அரசு வழங்கும் நிதியான ரூ.33,750/— உடன் கான்கிரீட் கூரை அமைப்பதற்காக தமிழ்நாடு அரசால் ஏற்கெனவே வழங்கப்பட்டுவந்த மானியத் தொகையான ரூ.26,250/— என்பதை மேலும் ரூ.15,000/— உயர்த்தி மொத்தம் ரூ.41,250/—ஐ மாநில நிதியாக வழங்கி கலைஞர் வீடு வழங்கும் திட்டத்திற்கு வழங்குவதுபோலவே ரூ.75,000/— என்ற அலகுத் தொகையை அனுமதித்து ஆணையிட்டுள்ளதால் (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்படும் கூடுதல் செலவினத்திற்காக ரூபாய் 155 கோடியை அரசு அனுமதித்துள்ளது. இத்தொகை, 'மானியக் கோரிக்கை எண் 42—ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை' என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

14. சத்துணவுத் திட்டத்தின்கீழ் சத்தான உணவைக் குழந்தைகளுக்கு வழங்க வேண்டுமென்ற எண்ணத்தில், உணவூட்டுச் செலவினத்தையும், உணவின் அளவையும் உயர்த்தி வழங்க கூடுதல் செலவினமாக ரூபாய் 74 கோடியும், வாரம் ஐந்து நாட்களிலும், தினமும் ஒரு முட்டை வழங்குவதால் (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்படும் கூடுதல் செலவினத்திற்காக ரூபாய் 125 கோடியும் அரசு அனுமதித்துள்ளது. இதற்காக "மானியக் கோரிக்கை எண் 45—சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை" என்பதன்கீழ், துணை மதிப்பீடுகளில் உணவூட்டுச் செலவினத்திற்காக ஒவ்வொரு இனத்தின்கீழும் 1,000/— ரூபாயும், கூடுதல் முட்டை வழங்குவதற்காக ரூபாய் 50 கோடியும் சேர்க்கப்பட்டுள்ளது.

15. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2010—2011 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

(74ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பை காண்க.)

2010-2011 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

(ரூபாய் ஆயிரத்தில்)

வ. எண்.	கோரிக்கை	வருவாய்	மூலதனம்	கடன்
1	மாநில சட்டமன்றம்	29,48	-	-
2	ஆளுநர் மற்றும் அமைச்சரவை	1	-	-
3	நீதி நிருவாகம்	2,58,82	-	-
4	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	2,25,15	4,79,49	-
5	வேளாண்மைத் துறை	71,89,59	55,24,37	90,00,00
6	கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை)	8,77,36	-	-
7	மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை)	13,35,41	11,00	-
8	பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை)	2	-	-
9	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	6	2,73,67	-
10	வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	47,24	-	-
11	முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	2	-	-

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(ரூபாய் ஆயிரத்தில்)

வ. எண்.	கோரிக்கை	வருவாய்	மூலதனம்	கடன்
12	கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	98,42	1	39,65
13	உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	201,09,39	-	500,00,00
15	சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை	24,83	2	-
16	நிதித் துறை	26,76	-	-
17	கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)	1	-	-
18	கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)	13,80	-	-
19	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	70,10,93	18,49,30	-
20	உயர் கல்வித் துறை	2,01,39	1	-
21	நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை	9,00,00	13	-
22	காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	3,55,69	2	-
23	தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	13,64,59	-	-

(ரூபாய் ஆயிரத்தில்)

வ. எண்.	கோரிக்கை	வருவாய்	மூலதனம்	கடன்
24	சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	2,29,30	2,77,71	-
25	இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	3	-	-
26	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	406,51,48	1	49,45,00
27	தொழில் துறை	6,18,25	2,10,00	6,18,34
28	செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)	49,09	-	-
29	சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை)	3,93,51	5,35,00	-
30	எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)	-	1,15,00	-
31	தகவல் தொழில்நுட்பவியல் துறை	289,19,33	-	-
32	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	52,68,92	-	-
34	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	316,86,80	1	-
35	பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை	78,10	-	-

2010 நவம்பர் 9]

(ரூபாய் ஆயிரத்தில்)

வ. எண்.	கோரிக்கை	வருவாய்	மூலதனம்	கடன்
36	திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	2	2	-
38	பொதுத் துறை	71,88	-	-
39	கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)	1,16,11	4,85,21	-
40	பாசனம் (பொதுப் பணித் துறை)	20,48	13,35,10	-
41	வருவாய்த் துறை	209,90,44	-	-
42	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	157,13,10	468,78,02	-
43	பள்ளிக் கல்வித் துறை	42,61,35	1	50,00,00
44	குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை	59,51	-	-
45	சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	100,66,06	-	-
46	தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)	122,91,54	-	-
47	இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)	5	-	-
48	போக்குவரத்துத் துறை	20,00,00	-	54,19,44
49	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	3,37,20	-	-

(ரூபாய் ஆயிரத்தில்)

வ. எண்.	கோரிக்கை	வருவாய்	மூலதனம்	கடன்
50	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	*6,68,00*	--	
51	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	*22,82,00*	-	-
	பெருமொத்தம்	**2,168,41,52**	**579,74,11**	**750,22,43**

2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—*தொடர்ச்சி*

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி என்ற முறையில்* Zero Hours*—ல் சில பிரச்சினைகளை நாங்கள் கொண்டு வருகிறபோது நன்றி சொல்வதற்கு மட்டும் நீங்கள் அனுமதித்து, எதிர்க்கட்சியை நசுக்குகின்ற வேலையிலே நீங்கள் ஈடுபடுகின்ற காரணத்தால் உங்களைக் கண்டித்து இந்தச் சபையிலிருந்து நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.*

(உறுப்பினர்கள் திரு. க. இராஜேந்திரன் மற்றும் திரு. ல. ராதாகிருஷ்ணன் தவிர அ.இ.அ.தி.மு.க. மற்றும் ம.தி.மு.க. உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

5. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஆ) முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2010–2011, மானியக் கோரிக்கைகள் மீது வெட்டுத் தீர்மானங்கள் அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 8–11–2010 ஆம் நாளன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவிற்கிணங்க, 2010–2011 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்படும் மானியக் கோரிக்கைகளின்மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள் ஒவ்வொரு மானியக் கோரிக்கையின்மீதும் தலா 5 வெட்டுத் தீர்மானங்களுக்கு மிகாமல் இன்று (9–11–2010) பிற்பகல் 3–00 மணிக்குள் பேரவைச் செயலகத்தில் சேர்ப்பிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.*